ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் அருளிச்செய்த

# ॥ அமிருதாசுவாதினி ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# ॥ அமிருதாசுவாதினி ॥

சீரொன்று தூப்புல் திருவேங்கடம் உடையான்
பாரொன்றச் சொன்ன பழமொழியுள் - ஓரொன்று
தானே அமையாதோ தாரணியில் வாழ்வார்க்கு
வானேறப் போமளவும் வாழ்வு

‡மூலம் கிளை என⋆ ஒன்றிரண்டான மொழி இரண்டும்⋆
மேல் ஒன்றிலை என நின்ற⋆ அவ் வித்தகன் தன் உரையும்⋆
காலம் கழிவதன் முன்னம்⋆ கருத்துறக் கண்டிடவே⋆
ஞாலம் புகழும் நம் தேசிகர் தாம்⋆ நம்மை வைத்தனரே (1)

காரணமும் காவலனும் ஆகி⋆ என்றும்
கமலை உடன் பிரியாத நாதனான⋆
நாரணனுக்கடியேன் நான் அடிமை பூண்ட⋆
நல் அடியார்க்கல்லால் மற்றொருவர்க்கல்லேன்⋆
ஆரணங்கள் கொண்டகமும் புறமும் கண்டால்⋆
அறிவாகி அறிவதுமாய் அறு நான்கன்றிச்⋆
சீர் அணிந்த சுடர் போலத் திகழ்ந்து நின்றேன்⋆
சிலை விசயன் தேர் அனையச் சிறு வேதத்தே (2)

யான் எனதென்பதொன்றில்லை⋆ என் செய்வதவனை அல்லால்⋆
ஆனதறிந்திடும் தன் அடியார்க்கு⋆ எனை ஆட்படுத்தித்⋆
தான் எனை நல்கி நடத்துகின்றான்⋆ தன் அருள் வழியே⋆
நான் உனை வீடு செய்வேன் என்ற⋆ நம் திருநாரணனே (3)

யாதாம் இவை அனைத்தும்⋆ படைத்தேந்தும் இறைவனுமாய்க்⋆
கோதாம் குணங்கள் உடன்⋆ குறுகாத குணத்தனுமாய்⋆
மாதா பிதா என⋆ மன் உறவாய்க் கதி என்ன நின்றான்⋆
போதார் திருவுடன்⋆ பொன் அருள் பூத்த நம் புண்ணியனே (4)

இரு விலங்கு கழித்திடராம் உடலம் தன்னில்⋆
    இலங்கு நடு நாடியினால் எம்மை வாங்கி⋆
ஒரு விலங்கு நெறி அல்லா வழியால் மன்னும்⋆
    உயர் வானில் ஏற்றி உயிர் நிலையும் தந்து⋆
பெரு விலங்காம் அருள் தன்னால் தன் அடிக் கீழ்ப்⋆
    பிரியாத அமரர் உடன் பிணைத்துத் தன்னார்⋆
உருவில் அங்கு மிசைவிக்கும் உம்பர் போகம்⋆
    உகந்து தரும் திருமாலை உகந்தோம் நாமே (5)

உறவை இசைந்திறை இல்லா ஒருவர்க்கென்றும்⋆
    ஒண் சுடராய் ஓர் எழுத்தில் ஓங்கி நின்றோம்⋆
துறவறமும் தூமதியும் துயரம் தீர்வும்⋆
    தூயவர்கட்கானமையும் இரண்டில் உற்றோம்⋆
அற முயலும் அனைத்துறவாய் அனைத்தும் ஏந்தும்⋆
    அம்புயத்தாள் கணவனை நாம் அணுகப் பெற்றோம்⋆
பிறவி அறுத்தடி சூடி அடிமை எல்லாம்⋆
    பிரியாத அமரர் உடன் பெற்றோம் நாமே (6)

கருமம் என ஞானம் என அதனால் கண்ட⋆
    உயிர் கவரும் காதல் எனக் காணில் ஓங்கும்⋆
அரு மறையால் தரு நிலையில் இன்னாள் எல்லாம்⋆
    அடியேனை அலையாத வண்ணம் எண்ணித்⋆
தருமம் உடையார் உரைக்க யான் அறிந்து⋆
    தனக்கென்னா அடிமைக்காம் வாழ்ச்சி வேண்டித்⋆
திருமகளோடொரு காலும் பிரியா நாதன்⋆
    திண் கழலே சேது எனச் சேர்கின்றேனே (7)

வினை விடுத்து வியன் குணத்தால் எம்மை ஆக்கி⋆
    வெருவுரை கேட்டவை கேட்க விளம்பி நாளும்⋆
தனை அனைத்தும் அடைந்திடத் தான் அடைந்து நின்ற⋆
    தன் திருமாதுடன் இறையும் தனியா நாதன்⋆
நினைவழிக்கும் வினை வழிக்கு விலக்காய் நிற்கும்⋆
    நிகர் இல்லா நெடுங்குணங்கள் நிலை பெறத்⋆ தன்

கனை கழற் கீழ் அடைக்கலமாக் காட்சி தந்து⋆
    காரணனாம் தன் காவல் கவர்கின்றானே (8)

என்னது யான் செய்கின்றேன் என்னாதாருக்கு⋆
    இன் அடிமை தந்தளிப்பான் இமையோர் வாழும்⋆
பொன் உலகில் திருவுடனே அமர்ந்த நாதன்⋆
    புனல் ஆரும் பொழில் அரங்கம் திகழ மன்னித்⋆
தன் அகலம் அகலாத தகவால் ஓங்கும்⋆
    தகவுடனே தன் கருமம் தானே எண்ணி⋆
அன்னை என அடைக்கலம் கொண்டஞ்சல் தந்து⋆ என்
    அழலாற நிழலார அளிக்கின்றானே (9)

ஒண் தொடியாள் திருமகளும் தானும் ஆகி⋆
    ஒரு நினைவால் ஈன்ற உயிர் எல்லாம் உய்ய⋆
வண் துவரை நகர் வாழ வசுதேவற்காய்⋆
    மன்னவற்குத் தேர்ப் பாகனாகி நின்ற⋆
தண் துளவ மலர் மார்பன் தானே சொன்ன⋆
    தனித்தருமம் தான் எமக்காய்த் தன்னை என்றும்⋆
கண்டு களித்தடி சூட விலக்காய் நின்ற⋆
    கண் புதையல் விளையாட்டைக் கழிக்கின்றானே (10)

துய்ய மனத்தர்⋆ துறை அணுகாத துணை இலியேன்⋆
    ஐயம் அறுத்துனதாணை⋆ கடத்தல் அகற்றினை நீ⋆
கை அமர் சக்கரக் காவல⋆ காக்கும் திருவருளால்⋆
    வையம் அளந்த அடிக் கீழ்⋆ அடைக்கலம் வைத்தருளே (11)

அறியாத இடைச்சியரும் அறியும் வண்ணம்⋆
    அம்புயத்தாள் உடன் அந்நாள் அவதரித்த⋆
குறை யாதும் இல்லாத கோவிந்தா⋆ நின்
    குரை கழற் கீழ் அடைக்கலமாம் குறிப்புத் தந்தாய்⋆
வெறி ஆரும் மலர் மகளும் நீயும் விண்ணில்⋆
    விண்ணவர்கள் அடி சூட இருக்கும் மேன்மை⋆
குறையாத வினை அகற்றி அடிமை கொள்ளக்⋆
    குறுக ஒரு நன்னாள் நீ குறித்திடாயே (12)

தத்துவமும் சாதனமும் பயனும் காட்டும்⋆
 தாரம் முதல் இரு நான்கும் தன் கருத்தால்⋆
முத்தி வழி நாம் முயலும் வகையே காண⋆
 முகுந்தன் இசைத்தருள் செய்த ஐந் நால் ஐந்தும்⋆
பத்தி தனில் படிவில்லார் பரம் சுமத்தப்⋆
 பார்த்தன் தேர் முன்னே தாம் தாழ நின்ற⋆
உத்தமனார் உத்தம நல்லுரை நால் எட்டும்⋆
 உணர்ந்தவர் தாம் உகந்தெம்மை உணர்வித்தாரே (13)

பரக்கும் புகழ் வரும்⋆ பைம் பொருள் வாய்த்திடும் பத்தர்களாய்⋆
 இரக்கின்றவர்க்கிவை ஈந்தால்⋆ அறம் உளதென்றியம்பார்⋆
கரக்கும் கருத்துடை⋆ தேசிகர் கன்றென நம்மை எண்ணிச்⋆
 சுரக்கும் சுரவிகள் போல்⋆ சொரிகின்றனர் சொல் அமுதே (14)

சோகம் தவிர்க்கும்⋆ சுருதிப் பொருள் ஒன்று சொல்லுகின்றோம்⋆
 நாகம் தனக்கும் இராக்கதற்கும்⋆ நமக்கும் சரணாம்⋆
ஆகண்டலன் மகன் ஆகிய⋆ ஆவலிப்பேறிய ஓர்⋆
 காகம் பிழைத்திடக்⋆ கண் அழிவே செய்த காகுத்தனே (15)

ஒருக்காலே சரணாக அடைகின்றாற்கும்⋆
 உனக்கடிமை ஆகின்றேன் என்கின்றாற்கும்⋆
அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும்⋆
 அஞ்சேல் என்றருள் கொடுப்பன் இதுதான் ஓதும்⋆
இருக்காலும் எழில் முனிவர் நினைவினாலும்⋆
 இவை அறிவார் செயலுடன் என் இசைவினாலும்⋆
நெருக்காத நீள் விரதம் எனக்கொன்றென்னும்⋆
 நெறி உரைத்தார் நிலை உணர்ந்து நிலை பெற்றோமே (16)

பொன்னை இகழ்ந்து விருகங்கள்⋆ புல்லிய புல் உகந்தால்⋆
 மன்னர் எடுப்பதப்பொன் அலதே⋆ மன் உலகனைத்தும்⋆
தன்னை அடைந்திடத்⋆ தான் அருள் செய்யும் தனிச் சிலையோன்⋆
 பொன் அடி நாம் அடைந்தோம்⋆ புறமார் என் கொல் செய்திடினே (17)

வேதத் திரளின் விதி உணர்ந்தோர்கள்⋆ விரித்துரைத்த⋆
காதல் கதியையும்⋆ ஞானத்தையும் கருமங்களையும்⋆
சாதிக்கவல்ல சரணாகதி⋆ தனி நின்ற நிலை⋆
ஓதத் தொடங்கும்⋆ எழுத்தின் திறத்தில் உணர்மின்களே (18)

மூ உலகும் தன் பிழையைத் தானே சாற்ற⋆
முனிவர்களும் தேவர்களும் முனிந்த அந்நாள்⋆
தாவரிதாய் எங்கும் போய்த் தளர்ந்து வீழ்ந்த⋆
தனிக் காகம் தான் இரந்த உயிர் வழங்கிக்⋆
காவல் இனி எமக்கெங்கும் கடன் என்றெண்ணிக்⋆
காண நிலை இலச்சினை அன்றிட்ட வள்ளல்⋆
ஏவல் பயன் இரக்கம் இதற்காறென்றோதும்⋆
எழில் உடையார் இணை அடிக்கீழ் இருப்போம் நாமே (19)

திருத்தம் பெரியவர்⋆ சேரும் துறையில் செறிவிலர்க்கு⋆
வருத்தம் கழிந்த⋆ வழி அருள் என்ற நம் மண் மகளார்⋆
கருத்தொன்ற⋆ ஆதி வராகம் உரைத்த கதி அறிவார்⋆
பொருத்தம் தெளிந்துரைக்கப்⋆ பொய் இலா மதி பெற்றனமே (20)

இடம் பெற்றார் எல்லாம் என் உடலாய் நிற்ப⋆
இடர் பிறப்பென்றிவை இல்லா என்னை அன்பால்⋆
அடம் பற்றாம் அவன் என்று நினைந்தான் யாவன்⋆
அவன் ஆவி சரியும்போதறிவு மாறி⋆
உடம்பில் தாருபலம் போல் கிடக்க நானே⋆
உய்யும் வகை நினைந்துயர்ந்த கதியால்⋆ என்றன்
இடம் பெற்றென்னுடன் வாழ எடுப்பன் என்ற⋆
எம் பெருமான் அருள் பெற்று மருள் செற்றோமே (21)

இரண்டுரையாத⋆ நம் ஏனம் உரைத்த உரை இரண்டின்⋆
திரண்ட பொருள்கள் தெளிந்து⋆ அடி சூடினம் திண் அருளால்⋆
சுருண்ட நம் ஞானச் சுடர் ஒளி⋆ சுற்றும் பரப்பதன் முன்⋆
புரண்டது நம் வினை⋆ போம் இடம் பார்த்தினிப் போம் அளவே (22)

மலையும் குலையும் என்றெண்ணியும்⋆ வன் பெரும் புண் திரங்கித்⋆
தலையும் வெளுத்த பின்⋆ தானே அழிய இசைகின்றிலீர்⋆
அலையும் கடல் கொண்ட⋆ வையம் அளித்தவன் மெய் அருளே⋆
நிலை என்று நாடி⋆ நிலை நின்ற பொய்ம்மதி நீக்குமினே (23)

கண்ணன் கழல் தொழக்⋆ கூப்பிய கையின் பெருமை தன்னை⋆
எண்ணம் கடக்க⋆ யமுனைத் துறைவர் இயும்புதலால்⋆
திண்ணம் இது என்று⋆ தேறித் தெளிந்த பின் சின்மதியோர்⋆
பண்ணும் பணிதிகள் பாற்றிப்⋆ பழந்தொழில் பற்றினமே (24)

பொங்கு புனல் ஆறுகளில் புவனம் எல்லாம்⋆
பொற் கழலால் அளந்தவன் தன் தாளால் வந்த⋆
கங்கை எனும் நதி போலக் கடல்கள் ஏழில்⋆
கமலை பிறந்தவன் உகந்த கடலே போலச்⋆
சங்குகளில் அவன் ஏந்தும் சங்கே போலத்⋆
தாரில் அவன் தண் துளவத் தாரே போல⋆
எங்கள் குல பதிகள் இவை மேலாம் என்றே⋆
எண்ணிய நல் வார்த்தைகள் நாம் இசைகின்றோமே (25)

சீர்க் கடலின் திரை என்னத் தகவால் மிக்க⋆
தேசிகராய்த் திண் இருளாம் கடலை நீக்கிப்⋆
பாற் கடலோன் திரு அணையாய் நின்று⋆ பாரம்
காணாத பவக் கடலைக் கடத்துகின்றான்⋆
ஈர்க்கும் மரக்கலம் என்ன இறைவர் இன்பம்⋆
எழுந்தழியும் குமிழி என இகந்தொழிந்தோம்⋆
ஆர்க்கினி நாம் என் கடவோம் நமக்கும் ஆர் என்
கடவார் என்று⋆ அடைந்தவர்கட்கறிவித்தோமே (26)

‡காசினியின் மணி அனைத்தும் காயா வண்ணன்⋆
கடைந்தெடுத்த கவுத்துவத்தின் சீர்மைக்கொவ்வா⋆
காசி முதலாகிய நல் நகரி எல்லாம்⋆
கார்மேனி அருளாளர் கச்சிக் கொவ்வா⋆
மாசின் மனந் தெளி முனிவர் வகுத்த எல்லாம்⋆
மால் உகந்த ஆசிரியர் வார்த்தைக் கொவ்வா⋆

வாசி அறிந்திவை உரைத்தோம் வையத்துள்ளீர்⋆
வைப்பாக இவை கொண்டு மகிழ்மினீரே (27)

‡அந்தம் இலாப் பேர் இன்பம் அருந்த ஏற்கும்⋆
அடியோமை அறிவுடனே என்றும் காத்து⋆
முந்தை வினை நிரை வழியில் ஒழுகாதெம்மை⋆
முன் நிலையாம் தேசிகர் தம் முன்னே சேர்த்து⋆
மந்திரமும் மந்திரத்தின் வழியும் காட்டி⋆
வழிப் படுத்தி வான் ஏற்றி அடிமை கொள்ளத்⋆
தந்தை என நின்ற தனித் திருமால் தாளில்⋆
தலை வைத்தோம் சடகோபன் அருளினாலே (28)

தான் தனக்குத் தன்னாலே தோன்றித்⋆ தன்னோர்
ஒளி அணைக்கும் குணத்தாலும் தன்னைக் கண்டு⋆
தான் தனக்கென்றறியாத தன் குணத்தைத்⋆
தன் குணத்தால் தான் இறையில் தானே கூட்டி⋆
ஊன் மருத்துப் புலன் மனம் மான் ஆங்காரங்கள்⋆
ஒரு மூலப் பிரகிருதி அன்றி நின்ற⋆
நான் தனக்குத் தான் தனக்கென்றிசைவு தந்த⋆
நாரணனை நான் மறையால் நான் கண்டேனே (29)

கழியாத கரு வினையில் படிந்த நம்மைக்⋆
காலம் இது என்றொரு கால் காவல் செய்து⋆
பழியாத நல் வினையில் படிந்தார் தாளில்⋆
பணிவித்துப் பாசங்கள் அடைய நீக்கிச்⋆
சுழியாத செவ்வழியில் துணைவரோடே⋆
தொலையாத பேர் இன்பம் தரமேல் ஏற்றி⋆
அழியாத அருள் ஆழிப் பெருமான் செய்யும்⋆
அந்தம் இலா உதவி எல்லாம் அளப்பார் ஆரே (30)

‡நின் அருளாம் கதி அன்றி மற்றொன்றில்லேன்⋆
நெடுங்காலம் பிழை செய்த நிலை கழிந்தேன்⋆
உன் அருளுக்கினிதான நிலை உகந்தேன்⋆
உன் சரணே சரண் என்னும் துணிவு பூண்டேன்⋆
மன் இருளாய் நின்ற நிலை எனக்குத் தீர்த்து⋆

வானவர் தம் வாழ்ச்சி தர வரித்தேன் உன்னை⋆
இன் அருளால் இனி எனக்கோர் பரம் ஏற்றாமல்⋆
என் திருமால் அடைக்கலம் கொள் என்னை நீயே (31)

பரவும் மறைகள் எல்லாம்⋆ பதம் சேர்ந்தொன்ற நின்ற பிரான்⋆
இரவன்றிரவியின்⋆ காலத்தழைத்த எழிற் படையோன்⋆
அரவும் கருடனும்⋆ அன்புடன் ஏந்தும் அடி இரண்டும்⋆
தர என் தமக்கருளால்⋆ தளரா மனம் தந்தனனே (32)

‡அலர்ந்த அம்புயத்திருந்து தேன் அருந்தி இன்னகல்⋆
அல்குலார் அசைந்தடைந்த நடை கொளாததுனம் எனோ⋆
நலம் தவிர்ந்ததால் அதென் கொல் நாவின் வீறிழந்ததால்⋆
நா அணங்கு நாதர் தந்த நாவின் வீறிழந்ததென்⋆
சலம் தவிர்ந்து வாது செய்து சாடி மூண்ட மிண்டரைச்⋆
சரிவிலேன் எனக்கனைத்துரைத்த ஏதிராசர் தம்⋆
வலம் தரும் கை நாயனார் வளைக்கிசைந்த கீர்த்தியால்⋆
வாரி பாலதாம் அதென்று மாசில் வாழி வாழியே (33)

சடையன் திறல் அவர்கள்⋆ பெருஞானக் கடல் அதனை⋆
இடை அமிழாது கடக்கினும்⋆ ஈதளவென்றறியார்⋆
விடை உடன் ஏழன்றடர்த்தவன்⋆ மெய் அருள் பெற்ற நல்லோர்⋆
அடைய அறிந்துரைக்க⋆ அவ்வடியோமும் அறிந்தனமே (34)

பா வளரும் தமிழ் மறையின் பயனே கொண்ட⋆
பாண் பெருமாள் பாடியதோர் பாடல் பத்தில்⋆
காவலனும் கணவனுமாய்க் கலந்து நின்ற⋆
காரணனைக் கருத்துற நாம் கண்ட பின்பு⋆
கோவலனும் கோமானும் ஆன அந்நாள்⋆
குரவை பிணை கோவியர் தம் குறிப்பே கொண்டு⋆
சேவல் உடன் பிரியாத பெடை போல் சேர்ந்து⋆
தீவினையோர் தனிமை எல்லாம் தீர்ந்தோம் நாமே (35)

‡ஆதி மறை என ஓங்கும் அரங்கத்துள்ளே⋆
அருள் ஆரும் கடலைக் கண்டவன் நம் பாணன்⋆
ஓதியதோர் இரு நான்கும் இரண்டுமான⋆

ஒரு பத்தும் பற்றாக உணர்ந்துரைத்தோம்⋆
நீதி அறியாத நிலை அறிவார்க்கெல்லாம்⋆
நிலை இதுவே என்று நிலை நாடி நின்றோம்⋆
வேதியர் தாம் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம்⋆
விதையாகும் இது என்று விளம்பினோமே (36)

‡காண்பனவும் உரைப்பனவும் மற்றொன்றின்றிக்⋆
கண்ணனையே கண்டுரைத்த கடிய காதல்⋆
பாண் பெருமாள் அருள் செய்த பாடல் பத்தும்⋆
பழ மறையின் பொருள் என்று பரவுகின்றோம்⋆
வேண் பெரிய விரி திரை நீர் வையத்துள்ளே⋆
வேதாந்த ஆரியென் என்றியம்ப நின்றோம்⋆
நாண் பெரியோம் அல்லோம் நாம் நன்றும் தீதும்⋆
நமக்குரைப்பார் உளர் என்று நாடுவோமே (37)

॥ சீரார்தூப்புல் திருவேங்கடமுடையான் திருவடிகளே சரணம் ॥